O.S.No. 431/2021 – Date : 16.03.2026

DW1 – கோவிந்தராஜீ

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

01.10.2021 தேதி முதல் 12.10.2021 தேதி வரை குலதெய்வ கோவிலுக்கு சென்றோம் என்பது குறித்து எந்த வித ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

17.10.2024 அன்று லோக் அதாலத்தில் இரு தரப்பினரும் பேசினோமா என்றால் பேசினோம். அவ்வாறு இருதரப்பினரும் பேசவில்லை என்றால் சரியல்ல. லோக் அதாலத்தில் வாதிக்கு பணம் ரூ.65,00,000/– கொடுத்ததாக கூறுவது குறித்து எனக்கு மேற்படி பணம் எவ்வாறு கிடைத்தது என்று ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. கிரய ஒப்பந்தப்படி வாதி, எங்களுக்கு தரவேண்டிய பாக்கி ரூ.10,00,000/– இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்றால் சரி. வாதி கிரய ஒப்பந்தப்படி தாவா சொத்தை கிரயம் செய்ய தாயாராக இருந்தார் என்றால் நான் கிரய ஒப்பந்தமே செய்து கொடுக்கவில்லை. வாதிக்கு கிரய ஒப்பந்தம் செய்துகொடுத்துவிட்டு தற்போது நிலத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் கிரயம் செய்து தர மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் பொய்யானது என்பது குறித்து நான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரி. வாதி கிரய ஒப்பந்தம் செய்தபிறகு கிரயம் செய்ய தயாராக இருந்துதான் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. சட்ட அறிவிப்பை நான்

பெற்றுக்கொண்டால் அது எனக்கு எதிராக போய்விடும் என்பதால் அதை பெறாமல் மறுத்து அனுப்பிவிட்டு நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு வாதிக்கு ரூ,65,00,000/– கொடுத்தும் வாதி மேலும் ரூ.5,00,000/– கேட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கும் எனக்கும் எந்த சமயத்திலும் சமரசம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவாப்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்.

குலதெய்வ கோவில் வீட்டிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் 25 கிலோமீட்டர் தூரம் இருக்கும். கோவில் உள்ள ஊர்தான் எங்களின் பூர்வீக ஊர் ஆகும். வழக்கில் சொல்லப்பட்டுள்ள முகவரியில் நானும் எனது சகோதரரும் வசித்து வருகிறோம் என்றால் சரி.

மறுவிசாரணை இல்லை.

Sd/– S.Sumathy,

Principal District Judge, Salem.